# அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்குகளுக்குக் கட்டண உயர்வு கூடாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 27-

அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்குகளுக்குக் கட்டண உயர்வு கூடாது! கருத்துச் சுதந்திரம் மிக்கவையாக அனைத்து நூலகக் கூட்ட அரங்குகளும் செயல்பட வேண்டும்! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

**புத்தகங்கள் அறிவின் திறவுகோல்கள்!**

2006-2011 இல் முத்தமிழறிஞர் கலைஞர் அரசு உருவாக்கிய அறிவு அடையாளங்களுள் ஒன்று சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள "அண்ணா நூற்றாண்டு நூலகம்". அதனை, அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சி முடக்கி மடைமாற்ற நினைத்த போது, தமிழ்ச் சமூகம் அறச் சீற்றத்துடன் எழுந்து, அதைத் தடுத்து நிறுத்தியது. கடந்த தி.மு.க. ஆட்சியில் மீண்டும் பொலிவு பெற்று ஏராளமான மாணவர்களும், கல்வியாளர்களும், இளைஞர்களும் பயன் பெறும் இடமாக அது அமைந்தது. மாதிரி நூலகம் போன்றும், தரநிலை அளவுகோல் (Bench Mark) போன்றும் அந் நூலகம் அமைந்துவிட்டது.

நூலகம் என்பதன் முழுப் பயன்பாட்டைப் பெறும் வகையில், சிறு புத்தக வெளியீட்டு அரங்கு, மாநாட்டு அரங்கு, பெருங் கூட்டங்களுக்கு வசதி யான கலை அரங்கு என்று பலவகை அரங்குகள் அங்கு உருவாக்கப்பட்டன. அவற்றில் சிறு புத்தக வெளியீட்டு அரங்கு என்பது இலக்கியக் கூட்டங்கள், சிறிய அளவில் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள் நடத்துவதற்குமான அரங்கமாகப் பயன்பட்டுவந்தது. அதற்கு ரூ.3000 என்று மிகக் குறைந்த தொகையைக் கட்டணமாக நிர்ணயித்து ஊக்குவித்து வந்த நிலையில், வரும் ஜூலை முதல் அதன் கட்டணம் ரூ.14,750 என்று நான்கு மடங்கு உயர்த்தப்பட்டும், கலையரங்கத்தின் வாடகை ரூ.3 லட்சம் என்பதிலிருந்து, ரூ.5 லட்சமாக உயர்த்தப்படுவதாக வந்துள்ள செய்தி கண்டனத்திற்குரியதாகும்.

**கட்டண உயர்வை தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும்!**

நூலகங்கள் போன்ற அறிவுக் கூடங்கள் வருமானத்திற்கானவை அல்ல. அவற்றுக்குச் செய்யப்படும் செலவு - கலை, பண்பாட்டு, அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுபவையாகும். எளிய பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், புதிய படைப்பாளிகளுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்த இந்த நிகழ்ச்சி அரங்கிற்கு அறிவிக்கப்பட்டுள்ள கட்டண உயர்வைத் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும். பழைய கட்டண விகிதமே உறுதிசெய்யப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

அண்ணா நூற்றாண்டு நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம் உள்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள நூலகக் கூட்ட அரங்குகளில் அரசியல் மாற்றுக் கருத்துகளுக்கும், கருத்து மாறுபாடு உடையோருக்கும் அனுமதி மறுக்காமல், எல்லோருக்குமான கருத்துச் சுதந்திரக் களங்களாகவும் அவை அமைய வேண்டும் என்பதையும் இச் சூழலில் நினைவுபடுத்தி, வலியுறுத்த விரும்புகிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

## திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க அறையில்

# தொ.மு.ச. நிர்வாகியை அடைத்து வைத்து தாக்கிய இணை பதிவாளர் மீது நடவடிக்கை வேண்டும்!

## டி.யு.சி.எஸ். தொ.மு.ச. பொருளாளர் கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு!

சென்னை, ஜூன் 27:

கலைஞர் பிறந்த நாளுக்கு அறுசுவை உணவு வழங்கியதால்திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க அறையில் டி.யு.சி.எஸ். பொருளாளர்பிரபாகரனை அடைத்து வைத்து தாக்கிய இணை பதிவாளர் மற்றும் மேலாளர், மற்றும் அவரது கார் டிரைவர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் டியுசிஎஸ் தொமுச பொருளாளர் பிரபாகரன் புகார் அளித்துள்ளார்.

சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி வரும் தொமுச பொருளாளர் பிரபாகரன் மற்றும் பொதுச்செயலாளர் ராஜன் சாமிநாதன் ஆகியோர் நேற்று அளித்தபுகார் மனுவில்கூறியிருப்பதாவது:

கடந்த 3ம் தேதி முன்னாள் முதல்வர் கலைஞரின் பிறந்த நாள் அன்று தொமுச சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கு திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க லிட் நிறுவனத்தில் இணை பதிவாளர் தேளி பிரியா எனக்கு விளக்கம் கேட்டு கடந்த 8ம் தேதி அறிவிப்பு கொடுத்தார். அதற்கான விளக்கத்தை நான் கடந்த 12ம் தேதி இணை பதி வாளரும், செயலாட்சிய ருமான தேவி பிரியாவிடம் கொடுத்தேன்.

இந்த நிலையில் கடந்த 22ம் தேதி மாலை 5.10 மணிக்கு இணைபதிவா ளர் தேவிபிரியா என்னை அழைப்பதாக அலுவலக உதவியாளர் என்னிடம் கூறினார். அதன்படி நான் அவரது அறைக்கு சென்ற போது, தேவிபிரியா மற்றும் அவரது கார் டிரைவர் ரத்தன கணேஷ் மற்றும் பொது மேலாளர் தமிழ்வாணன் இருந்தனர். அப்போது தேவிபிரியா எனது தொழிற் சங்க செயலாளர் ராஜன் சாமிநாதன் குறித்து தவறாக எழுதி கொடுக்கும்படி வற்புறுத்தினார். நான் அதற்கு மறுப்பு தெரிவித்தேன். உடனே என்னை தேவி பிரியா ஆபாசமாக பேசி அவரது கார் டிரைவரிடம் எனது கையை பிடிக்க சொல்லி மேலாளர் தமிழ்வாணன் என்னை கன்னத்திலும், இரும்பு பைப்பினால் மார்பிலும் தாக்கினார். பிறகு என்னிடம் தேவிபிரியா இங்கு நடந்ததை வெளியில் சொன்னால் எனது மனை வியை கொன்று விடுவோம் என்று மிரட்டினார்.

பின்னர் காயமடைந்த நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினேன். எனவே என்னை தாக்கி, எனது குடும்பத்திற்கு கொலை மிரட்டல் விடுத்த இணை பதிவாளரான தேவிபிரியா, அவரது கார் டிரைவர், மேலாளர் தமிழ்வாணன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து டி.யு.சி. எஸ்..தொ.மு.ச..வின் சார்பாக இராஜன்.சாமிநாதன் டி.யு.சி.எஸ். சரித்திரத்தில்.. கருப்புதினத்தினை.ஏற்படுத்தி உள்ள தொழிலாளர் விரோதப் போக்கு கொண்ட அதிகாரிகள் தொ.மு.ச.வைச் சேர்ந்தவரை கடுமையாக தாக்கியுள்ளனர். இதற்காக தொழிலாளர்களின் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்து அரசின் உயர்அலுவலர்கள் மற்றும் காவல்துறை மூலம் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து பணிநீக்கம் செய்து டி.யு.சி.எஸ். நிறுவனம் மற்றும் தொழிலாள ர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இரா.செந்தில்குமார் தலைமை !

# 51வது வட்ட பொருளாளர் ஜி.உமாபதி - உ.ரமணி இல்ல விழா!

## ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி - அ.சுபேர்கான் - ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை, ஜூன்.27

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட பொருளாளர் ஜி.உமாபதி, உ.ரமணி, ஆகியோரின் இல்ல நிகழ்ச்சி மற்றும் எஸ்.கோகுல்நாத், ஜி. ராதிகா, ஆகியோரின் செல்ல மகள்ஜி.ஆர்.ஹுரா ஸ்ரீ (எ) சஷ்டிகா முதலாம் ஆண்டு பிறந்த நாள் விழா இன்று (27.06.2026 சனிக்கிழமை) மாலை 6.30 மணியளவில் அறிவகம் திருமண மாளிகை, சூரியநாராயணன் தெரு, இராயபுரம், செ13ல் நடைபெறுகிறது.

இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமை வகிக்கிறார்.

51வது வட்டச்செயலாளர் க.கோவிந்தராஜ், சு.சேகர், வே.சிவக்குமார், தா.இளைய அருணா, பி.டி.பாண்டிசெல்வம், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், எஸ்.குமார், பி. ஜெயலட்சுமி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி, டாக்டர் அ.சுபேர்கான், ஜே.ஜே.எபினேசர், க. நாகம்மை கருப்பையா, ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எம்.எம்.சந்துரு, பி.சத்தியநாராயணன், டி.கவியரசு, கே.குபேந்திரன், டி. நந்தகுமார், கே.சசி, எம். கே.சாகுல் அமீத், எஸ். மாரியப்பன், எஸ்.சந்திரசேகர், வி.செல்ல பாண்டியன், எம்.வல்லவராஜ், க . சுரேஷ், ஜி.அருண்குமார், ஆர்.ராஜ்குமார், எம்.சண்முகம், எச்.பழனிராஜ், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

## 27, 28ம் தேதிகளில்

# சென்ட்ரல் - அரக்கோணம் வழித்தட ரயில்கள் ரத்து!

## தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, ஜூன் 27:

அரக்கோணம் பணிமனையில் மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, சென்ட்ரல் அரக்கோணம் வழித்தடத்தில், வரும் 27, 28ம் தேதிகளில் ரயில்கள் ரத்து செய்யப்படுவதாக, தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இது குறித்து தெற்கு ரயில்வே, சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை சென்ட்ரல் அரக்கோணம் வழித்தடத்தில் உள்ள அரக்கோணம் பணிமனையில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெறுகிறது. இதனால் மின்சார மற்றும் பயணிகள் ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, வருகிற 27ம் தேதி (இன்று) 27 மின்சார மற்றும் பயணிகள் ரயிலும், 28ம் தேதி 22 மின்சார மற்றும் பயணிகள் ரயிலும் ரத்து செய்யப்படுகிறது. மேலும், சில ரயில்கள் பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

அதன் விவரம் வருமாறு:

**27ம் தேதி ரத்து:**

அரக்கோணத்தில் இருந்து காலை 7.20, மதியம் 2.50 ஆகிய நேரங்களில் புறப்பட்டு வேலூர் செல்லும் பயணிகள் ரயில்களும், அதிகாலை 4, 5, காலை 6.25 ஆகிய நேரங்களில் புறப்பட்டு திருத்தணி செல்லும் மின்சார ரயில்களும், காலை 6.50 மணிக்கு புறப்பட்டு கடற்கரை செல்லும் மின்சார ரயில்களும், மாலை 6, இரவு 7 ஆகிய நேரங்களில் புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும் மின்சார ரயில்களும், காலை 5.50, மாலை 6.15 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரயில்களும், காலை 9.15 மணிக்கு புறப்பட்டு திருச்சானூர் செல்லும் பயணிகள் ரயிலும், இரவு 9 மணிக்கு புறப்பட்டு காட்பாடி செல்லும் பயணிகள் ரயிலும் ரத்து செய்யப்படுகிறது.

மூர்மார்க்கெட்டில் இருந்து காலை 7, இரவு 7.10 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் பயணிகள் ரயில்களும், காலை 9.50 மணிக்கு புறப்பட்டு திருச்சானூர் செல்லும் பயணிகள் ரயிலும் ரத்து செய்யப்படுகிறது.

திருத்தணியில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும் மின்சார ரயிலும், காலை 8.50 மணிக்கு புறப்பட்டு கடற்கரை செல்லும் பயணிகள் ரயிலும், இரவு 9.15, 11.10 ஆகிய நேரங்களில் புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரயில்களும் ரத்து செய்யப்படுகிறது.

காட்பாடியில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் பயணிகள் ரயிலும், வேலூரில் இருந்து காலை 10, மாலை 5.20 ஆகிய நேரங்களில் புறப்பட்டு அரக்கோணம் செல்லும் பயணிகள் ரயில்களும் ரத்து செய்யப்படுகிறது.

திருச்சானூரில் இருந்து மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும் பயணிகள் ரயிலும், திருச்சானூரில் இருந்து மாலை 3.40 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் பயணிகள் ரயிலும், செங்கல்பட்டில் இருந்து காலை 8.20, இரவு 8.25 ஆகிய ரேநங்களில் புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரயில்களும் ரத்து செய்யப்படுகிறது.

**28ம் தேதி ரத்து:**

அரக்கோணத்தில் இருந்து காலை 7.20, மதியம் 2.50 ஆகிய நேரங்களில் புறப்பட்டு வேலூர் செல்லும் பயணிகள் ரயில்களும், காலை 9.15 மணிக்கு புறப்பட்டு திருப்பதி செல்லும் பயணிகள் ரயிலும், காலை 4, 5, 6.25 ஆகிய நேரங்களில் புறப்பட்டு திருத்தணி செல்லும் மின்சார ரயில்களும், காலை 6.50 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரயிலும், காலை 9.50 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரும் பயணிகள் ரயிலும், காலை 5.50, மாலை 6.15 மணிக்கு புறப்பட்டு செங்கல்பட்டு வரும் மின்சார ரயில்களும் ரத்து செய்யப்படுகிறது.


திருவண்ணாமலையில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கு புறப்பட்டு தாம்பரம் வரும் பயணிகள் ரயிலும், மூர்மார்க்கெட்டில் இருந்து காலை 9.50 மணிக்கு புறப்பட்டு திருச்சானூர் வரும் பயணிகள் ரயிலும், திருச்சானூரில் இருந்து மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் வரும் பயணிகள் ரயிலும், வேலூரில் இருந்து காலை 10 மணிக்கும், திருப்பதியில் இருந்து மாலை 3.40 மணிக்கும், காட்பாடியில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கும், ஜோலார்பேட்டையில் இருந்து காலை 6.55 மணிக்கும், மூர்மார்க்கெட்டில் இருந்து காலை 7 மணிக்கும் புறப்பட்டு அரக்கோணம் வரும் பயணிகள் ரயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

திருத்தணியில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் வரும் மின்சார ரயிலும், செங்கல்பட்டில் இருந்து காலை 8.20 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் வரும் மின்சார ரயிலும் ரத்து செய்யப்படுகிறது. பகுதி நேர ரத்து இதேபோல, சென்னை சென்ட்ரல் அரக்கோணம் வழித்தடத்தில் வருகிற 28ம் தேதி மொத்தம் 41 மின்சார மற்றும் பயணிகள் ரயில்களும், சென்னை கடற்கரை செங்கல்பட்டு அரக்கோணம் வழித்தடத்தில் 7 மின்சார ரயில்களும் பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆயிரம் விளக்கு 118வது வட்டம்

# கழக வர்த்தகர் அணி கே.செல்வம் தந்தை ஏ.கண்ணன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, ஜூன் 27-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118வது வட்டம் கழக வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் கே.செல்வம், கழக செயல்வீரர் கே.ராஜசேகர் ஆகியோரின் தந்தை ஏ.கண்ணன் (வயது 83) அவர்கள் நேற்று (26.06.2026 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் இயற்கை யெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த ஏ.கண்ணன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலும் இன்று (27.6.2026 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு, இராயப்பேட்டை அம்மையப்பன் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மயிலாப்பூர் இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடைபெறுகின்றன.


21ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
14.04.1925

மறைவு
27.06.2005



ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு – குறள்

எங்கள் திராவிட குலவிளக்கு ஈகைச்செம்மல்

J.K.K. சுந்தரம்

21ம் ஆண்டு நினைவஞ்சலியை செலுத்துகிறோம்.
என்றும் நீங்கா நினைவுடன்..

மனைவி
S.ராஜம்மாள்

மகன்
J.K.S.மாணிக்கம்

மற்றும் குடும்பத்தினர், குமாரபாளையம் – 638 183.



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ. மணிமேகலை
ஜூன் 27 (2017)



தனது இளமைக் காலம் முதலே
கழகத்தில் ஈடுபாடு கொணடு
கழகப் பணியாற்றியவர்.

மெரட்டூர் கிளைச் செயலாளர்,
மீஞ்சூர் ஒன்றிய துணைச்
செயலாளர், மாவட்ட துணைச்
செயலாளர், மாவட்ட மகளிர் அணி
அமைப்பாளர் என பல்வேறு
பொறுப்புகள் வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால்
தொடங்கப்பட்ட மகளிர்
சுயஉதவிக் குழுக்களை
திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு
இடங்களில் தொடங்கி மகளிரின்
முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப்
போராட்டங்களிலும் பங்கேற்று
சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.